கோத்தகிரி சிறப்பு நிலை பேரூராட்சி
அலுவலகம், கோத்தகிரி.

ந.க.எண்.624/2013. நாள்: 04–07–2013.

## ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி சிறப்பு நிலை பேரூராட்சியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலைகளை செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோத்தகிரி பேரூராட்சியால் கோரப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக் கொள்ளப்படும்.

## நிபந்தனைகள்

1) ஒப்பந்தப்புள்ளிகள், கோத்தகிரி பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ **2013–ம்** ஆண்டு **ஜூலை மாதம் 19–ம் தேதி வெள்ளிகிழமை கிழமை 3.00** மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். பதிவு அஞ்சல் மூலம் குறிப்பிட்ட தேதிக்குள் கிடைக்குமாறும் அனுப்பலாம். அஞ்சலக காலதாமதத்திற்குப் பேரூராட்சி பொறுப்பு ஏற்காது.
2) மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **ஜூலை மாதம் 18–ம் தேதி வியாழன்கிழமை பிற்பகல் 3.00** மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் (விற்பனை வரி உட்பட) செலுத்தி படிவம் பெற்றுக் கொள்ளவேண்டும். மேற்படி படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3) ஒப்பந்தப்புள்ளிகள் கோத்தகிரி பேரூராட்சி செயல் அலுவலரால் கோத்தகிரி பேரூராட்சி அலுவலகத்தில் **ஜூலை 19–ம் தேதி பிற்பகல் 3.30** மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
4) ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர், செயல் அலுவலரின் முகவரி எழுதப்பட்டு மற்றும் எந்த வேலை விபரத்தை என்று தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி தான் அனுப்ப வேண்டும்.
5) ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை டேவணித் தொகையாகப் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி இரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இந்த டேவணித்தொகை உரிய அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்தக்காரர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்களுடைய டேவணித்தொகை வேலைகளுக்கான பிணை வைப்புத் தொகையாக வைத்துக்கொள்ளப்படும். இத்தொகைக்கு பேரூராட்சியால் வட்டி எதுவும் எடுக்கப்படமாட்டாது.
6) மதிப்பீடு விலைக்கு கூடுதலாக வேலையை செய்ததாகக் குறிப்பிடும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7) மதிப்பீடு விலைக்கு குறைவாக வேலையை செய்வதாக ஒப்புக்கொள்ளுகிறவர்கள் 10% வரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 10% மேற்கொண்டு கூடுதலாக கோரும் சதவீதத் தொகையில் 50% தொகை கூடுதல் பிணை வைப்புத் தொகையாக செலுத்தினால் தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதற்கும் பேரூராட்சியால் வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது. கூடுதலாக பெறப்பட்ட பிணை வைப்புத் தொகை மட்டும் வேலைகள் முடிவுற்று, முடிவு அறிக்கை வந்த பின் திரும்ப வழங்கப்படும்.
8) ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
9) டேவணித்தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், உரிய படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்குப் பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.
10) அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும். குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளியைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பேரூராட்சியைக் கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளி அல்லது பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.
11) ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அறிவுப்பு கிடைத்த தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் குறிப்பிட்ட படிவத்தில் தவறாது சொந்த செலவில் ஒப்பந்தக்காரர் வேலைகளை முறையாக முடித்து தருவதாக ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்க தவறினாலோ அல்லது அதிகப்படியாக செலுத்தக்கோரிய டேவணித்தொகையை செலுத்தத்தவறினாலோ மறு ஒப்பந்தப்புள்ளி விட்டு டேவணித்தொகை பறிமுதல் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு ஆதாயம் செய்யப்படும்.
12) ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்திய டேவணித்தொகை இது சம்பந்தப்பட்ட கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையாளரின் முடிவிற்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்படவேண்டும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்தக்காரர் பேரூராட்சிக்குச் செலுத்த வேண்டும்.
13) ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளியைத் திரும்ப பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தக்காரருடைய டேவணித்தொகை பேரூராட்சிக்கு பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றுக்கொண்டதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் பொறுப்பாவார்.
14) ஒப்பந்தக்காரர் மனுவில் வேலைகள் மற்றும் சதவீதத்தினை தெளிவாக எழுதி இருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்தக்காரர் கையொப்பம் இட்டிருக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

15) ஒப்பந்தக்காரர் ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும் (Standard Specification) ஆய்வு செய்யும் அலுவலர்கள் பொறுப்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டால் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் தனது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொள்ள வேண்டும்.

16) இதில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் வேலை முடிவுற்று ஆறுமாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தக்காரர் தனது சொந்தப்பொருப்பில் சரி செய்து கொடுக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத்தொகையிலிருந்து பேரூராட்சியால் பழுது பார்க்கப்படும்.

17) ஒப்பந்தப்பத்திரம் எழுதி முடித்த தேதியிலிருந்து ஒருவார காலத்திற்குள் வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்கவேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலை முடிக்கப்படவில்லையானால் மதிப்பீட்டுத் தொகையில் 1/2 % வீதம் வேலை முடிக்கப்படும் வரை குறிப்பிட்ட தேதியிலிருந்து தினசரி அபராத கட்டணம் வசூலிக்கப்படும். வேலை குறித்த காலத்திற்குள் முடிக்கப்படவில்லையானால் அதனால் பேரூராட்சிக்கு ஏற்படும் நஷ்டத்தை வசூலிக்க நீதி மன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அபராத கட்டணம் விதிக்கப்பட்டதற்குப் பிறகும் வேலையை முடிக்கவில்லையானால், பிணைவைப்புத் தொகையை பறிமுதல் செய்யவும் மறு ஒப்பந்தப்புள்ளி விட்டு வேலையை முடிக்கவும், பேரூராட்சிக்கு அதிகாரம் உண்டு. இதனால் உண்டாகும் இழப்பீடுகளுக்கு ஒப்பந்தக்காரரே பொறுப்பாகும்.

18) பட்டியலில் விதிமுறைப்படி ரூ.10000/– க்கு மேல் செய்யப்படும் வேலைகளுக்கு வருமான வரி மற்றும் விற்பனை வரி பிடித்தம் செய்யப்படும்.

19) ஏற்கனவே இப்பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள் பணி முடிக்காத ஒப்பந்தக்காரர்களுக்கு வேலைக்காக ஷெட்யூல் வழங்கப்படமாட்டாது.

20) ஒப்பந்தக்காரரால் செய்யப்படும் வேலைகளும், சப்ளை செய்யப்படும் பொருட்களும் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப அலுவலர்களால் அளவு மற்றும் மேலளவுகள் செய்யப்பட்டு, பட்டியல் தயார் செய்யப்பட்ட பின்பு, பட்டியல் உதகைமண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்ற பின்னரே தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும்.

21) ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு மன்ற ஒப்புதலுக்குப் பிறகு, பேரூராட்சியின் நிதிநிலையை அனுசரித்து பணி ஆணை வழங்கப்படும். இதில் செயல் அலுவலர் நிதி நிலைக்கேற்ப உசிதம் போல் செயல்பட அதிகாரம் உண்டு.

22) இம்மாவட்டத்தில் உள்ள கற்களை எடுத்து இப்பணிகளுக்கு பயன்படுத்தக்கூடாது. பணிகள் செய்யும் பொது பாறைகள் காணப்படின் அதனை உடைக்கக்கூடாது. JCB இயந்திரம் பயன்படுத்தக்கூடாது.

**அட்டவணை**

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்புதல் படிவ விலை | முன் வைப்புத் தொகை | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (M.L.A.C.D.S 2013–2014)** | | | | | |
| 1. | ஓரசோலை கிராமத்தில் தடுப்புசுவருடன் கூடிய சிமெண்ட் கான்கீரிட் சாலை மற்றும் வடிகால் கட்டுதல். | 10.00 | 7164 | 10000 | 60 நாட்கள் |
| | **மொத்தம்** | **10.00** | | | |

**ஒம் XXX**
**தலைவர்**
**கோத்தகிரி பேரூராட்சி**
**நீலகிரி மாவட்டம்**

**ஒம் XXX**
**செயல் அலுவலர்**
**கோத்தகிரி பேரூராட்சி**
**நீலகிரி மாவட்டம்**

*// உண்மை நகல் //*

பெறுதல்

இப்பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்கள்.

நகல் :

1. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதகை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
4. அலுவலக பலகைக்கு